Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 112/2023

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | கலியமூர்த்தி |
| Village | : | கள்ளுவிடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **41/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 02.04.2024**
(1, 2, 3, 4, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>**முதல்விசாரணை**</u>

நான் தற்போது கள்ளுவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு அ.சா.**1** முத்துசாமி என்பவரை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். அ.சா.**1** முத்துசாமி அவரது வீட்டில் **8,9** வெள்ளாடுகளை வளர்த்து வந்தார். சுமார் **1 1/2** ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் இரவு நேரத்தில் நான் தூங்கி கொண்டிருந்தபோது அதிகாலை **4.00** மணிக்கு அ.சா.**1** முத்துசாமி எனது வீட்டு கதவை தட்டி என்னை எழுப்பி அவர் வளர்த்து வந்த வெள்ளாடுகளில் **3** ஆடுகளை யாரோ திருடி சென்றுவிட்டதாக சொன்னார். நானும் அ.சா.**1** முத்துசாமியுடன் சேர்ந்து காணாமல் போன அவரது வெள்ளாடுகளை தேடி பார்த்தோம். கிடைக்கவில்லை. அதனால் அ.சா.**1** முத்துசாமி சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.1 முத்துசாமியின் எனது வீட்டிலிருந்து சுமார் 100 அடி இடைவெளியில் உள்ளது. அ.சா.1 முத்துசாமியின் வீட்டினை சுற்றி 4,5 வீடுகள் உள்ளதா என்றால் நிறைய வீடுகள் உள்ளது. அ.சா.1 முத்துசாமி ஆடுகள் காணாமல் போனது சம்பந்தமாக என்னிடம் சொல்லிய 2,3 மணிநேரத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் என்னை போலிசார் விசாரித்த பின்னர் மீண்டும் வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் நானும் அ.சா.1 முத்துசாமியுடன்

சேர்ந்து காணாமல் போன அவரது ஆடுகளை தேடிபார்த்தேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

ம.வி.இல்லை